பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

09 11 2024 6 30

சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நடப்பு கரீப் பருவத்தில் 185 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
2. ஹஜ் புனித பயண திட்டத்தை எளிமையாக்குவதற்கான பல சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.
3. அனைத்து பட்டாசு தொழிற்சாலைகளிலும் பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
4. தமிழகத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 19 ஆயிரம் ஆசிரியர்கள் படிப்படியாக பணியமர்த்தப்படுவார்கள் என்று மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.
5. ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Anahat Singh** இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நடப்பு கரீப் பருவத்தில் 185 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய நுகர்வோர் மற்றும் பொது விநியோகத் திட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பு ஆண்டுக்கான கொள்முதல் கடந்த மாதம் பஞ்சாப் மாநிலத்தில் தொடங்கப்பட்டு சுமார் மூவாயிரம் மண்டிகளில் கொள்முதல் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டள்ளது.

நடப்பு ஆண்டுக்கான கொள்முதல் இம்மாதம் 30-ஆம் தேதி வரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்தர நெல்லுக்கு குவிண்டாலுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை இரண்டாயிரத்து 320 ரூபாய் வழங்கப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஹஜ் புனித பயண திட்டத்தை எளிமையாக்குவதற்கான பல சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

ஹஜ் பயணத் திட்டத்தை மேற்கொள்வதற்கான மின்னணு கட்டமைப்பு, அதிக அளவில் பெண்களை ஹஜ் யாத்திரைக்கு ஊக்குவிப்பது, குறைந்த வருவாய் பிரிவினரை பயணத் திட்டத்தில் இணைப்பது போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ஹஜ் யாத்திரிகர்களை அனுப்புவதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பயணிகளுக்குத் தேவையான மருத்துவ வசதியை செய்து தரவும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

80 வயதுக்கு மேற்பட்ட 40 ஆயிரம் பேர் இந்த ஆண்டு ஹஜ் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

கடுமையான வானிலையை சமாளிக்கும் வகையில் யாத்திரிகர்களுக்குத் தேவையான வசதிகளை மேற்கொள்ளவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

[]<<<>>>[]

அனைத்து பட்டாசு தொழிற்சாலைகளிலும் பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் மேலசின்னய்யா புரத்தில் பட்டாசு தொழிற்சாலை ஒன்றை ஆய்வு செய்த முதலமைச்சர், தொழிலாளர்களின் பாதுகாப்புக்கான காப்பீடு செய்து தரப்பட வேண்டுமென்று கூறினார்.

பட்டாசு கூடங்களில் ரசாயன பொருட்கள், பட்டாசுகள் மற்றும் திரிகள் வைக்கும் அறைகளை பாதுகாப்பாக பராமரிக்க வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

அனைத்து தொழிற்சாலைகளிலும் பசுமைச் சூழலை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

பட்டாசு தொழிலாளர்களிடையே கலந்துரையாடிய திரு மு க ஸ்டாலின், அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

வேளச்சேரி எம் ஆர் டி எஸ் ரயில்வே சாலைப்பகுதியில் வெள்ளப் பாதிப்பை தடுப்பதற்காக அமைக்கப்பட்டு வரும் குளத்தை இன்று நேரில் பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடையாறு மண்டலத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தெற்கு பக்கிங்காம் கால்வாய் பகுதி, கிண்டி தொழிற்பேட்டை, மாம்பலம், ரெட்டிக்குப்பம், ராஜ்பவன் கால்வாய் பகுதிகளில் தங்கியிருந்த வண்டல் மண் தூர்வாரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அதி கனமழை பெய்யும் காலங்களில் மழைநீர் தேங்குவதை தடுக்க போதிய அளவில் மோட்டார் பம்புகள், டிராக்டர் பம்புககள் உள்ளிட்டவை தயார் நிலையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வேளச்சேரி எம் ஆர் டி எஸ் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் புதிய குளம் பயன்பாட்டுக்கு வரும்போது, வேளச்சேரி மக்களின் வெள்ளப்பாதிப்புகளுக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என்றும் திரு மா சுப்ரமணியன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஆதரவற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட இருப்பதாக மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் மகளிர் தொடர்பான கருத்தரங்கில் பேசிய அவர், ஆதரவற்ற பெண்கள் சுய தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேறுவதற்காக இந்த நிதி வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் மூலம் ஆதரவற்ற பெண்கள் இந்த நிதியை கொண்டு நடமாடும் உணவகங்கள், காய்கறி வியாபாரம், சிற்றுண்டு உள்ளிட்ட சுய தொழில்களை செய்து நிலையான வருமானம் பெறலாம் என்றும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகள் ஊடகங்களில் விளம்பரம் செய்வதற்கு தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி திரு கே ஆர் ஸ்ரீராம், நீதிபதி திரு செந்தில்குமர் அமர்வு, மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை சார்ந்த ஒவ்வொரு

விளம்பரத்தையும் ஊடகங்கள் சரிபார்த்து வெளியிட வேண்டும் என எதிர்பார்க்க முடியாது என்று தெரிவித்தனர்.

விதிமுறைகளை மீறி செயல்படும் மருத்துவர்கள், மருத்துவமனைகள் மீது மருத்துவ ஆணையம் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும். எனவே மனுதாரர் இது சம்பந்தமாக மருத்துவ ஆணையத்திடம் புகார் அளிக்கலாம் என்றும் கூறினார்.

போலியான விளம்பரங்களை வெளியிட்டால் அது தொடர்பாக காவல்துறையிடம் புகார் அளிக்கலாம் என்றும், விளம்பரங்களை வெளியிடும் ஊடகங்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி பொதுப்படையாக உத்தரவு பிறப்பிக்க இயலாது என்றும் கூறி நீதிபதிகள் வழக்கை தள்ளுபடி செய்தனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 19 ஆயிரம் ஆசிரியர்கள் படிப்படியாக பணியமர்த்தப்படுவார்கள் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தை அடுத்த பெருமூச்சு அரசு நடுநிலைப் பள்ளியில் இன்று ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், மாணவர்களை நேரடியாக சந்தித்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 98 புள்ளி எட்டு சதவீதம் அதிகரித்துள்ளதை மத்திய அரசின் மதிப்பீடுகள் தெரிவிப்பதாகக் கூறினார்,

*( சவுண்ட்பைட் - அன்பில் மகேஷ் ) ---38 செகண்ட்*

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் மையம் கொண்டுள்ள வளிமண்டல கீழடுக்கு சுழற்சி அடுத்த 36 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக உருவாகக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களில் காவிரி டெல்டா மாவட்டங்களிலும், உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --- 55 செகண்ட்*

**[]<<<>>>[]**

செங்கல்பட்டு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஐயாயிரம் பனை விதைகள் நடும் பணியினை மாநில சிறு குறு மற்றும் நடுத்ததர தொழில்துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் திருபோரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

கிருஷ்ணகிரி மாவட்டம் நரு-பையூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை இன்று வழங்கிய மாநில அமைச்சர் திரு சக்கரபாணி, பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களையும் வழங்கினார்.

**[]<<<>>>[]**

மாமன்னன் ராஜராஜசோழனின் ஆயிரத்து 39-வது சதய விழா இன்று தஞ்சாவூர் மாவட்டம் பெரியகோவில் வளாகத்தில் இன்று தொடங்கியது.

**[]<<<>>>[]**

தஞ்சாவூர் மாவட்ட முன்னாள் படை வீரர்கள் குறைதீர்க்கும் கூட்டம் இம்மாதம் 14-ஆம் தேதி நடைபெறும் என ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி உமா இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த சேவை மையத்தை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி இன்று பார்வையிட்டார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டம். திருக்கோவிலூர் அருகே மேமானூர் கிராமத்தில் ஓடை புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டு வந்த வீடுகளை அகற்றும் பணி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் மாவட்ட அளவிலான கலை திருவிழா நடைபெறவுள்ள ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Anahat Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் 11-7, 8-11, 11-9, 11-8 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் **Wong Po Yui Kirstie**–ஐ வென்றார்.

**[]<<<>>>[]**

சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் நடப்பாண்டிற்கான சிறந்த ஆட்டக்காரர் விருது இந்தியாவின் ஹரிமன் ப்ரீத்சிங்கிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த கோல்கீப்பருக்கான விருதுக்கு இந்தியாவின் ஸ்ரீஜேஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

***End of News***